கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௧. } விரோதிகிருது௵ சித்திரைமீ { பகுதி க.

## * இல்லறவொழுக்கம்.

அவையடக்கம்.

மாட்சிமை தங்கிய அக்கிராசனாதிபதியவர்கட்கும், மதிநுட் வாய்ந்த அவைக்களத்தார்கட்கும் அநந்தவந்தனம் அன்பொடு கனக்.

ஐயன்மீர்!

கல்வி அறிவு ஒழுக்கமுதலிய எல்லா நலன்களு மிகையப் ற்று விளங்கும் நம்மனோர் முன்னர் அன்னவற்றுள் ஒன்றாயில் க தமியேன்புக்கு (இல்லறமல்லது நல்லறமன்று) இல்லறவொழு மென்னு மிவ்விடயத்தை உபந்நியாசிப்பான் றொடங்குதல் என கு அச்சத்தைத் தருகின்றதாயினும், நீயிரெல்லீரும் ஒருங்கு இ வீற்றிருந்து பாராட்டும் அற்புதக் காட்சியைப் பெற்று

---

* மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையின் இரண்டாம ஆண்டு நிறை றைக் கொண்டாட்டச்சபையில் மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் ரா. சுந்தரராமக்கவிராயர் எழுதி வாசித்தது.

விளங்கும் இச்சன்மார்க்கசபை யென்னும் அருமைக் குழவிக்கு நற்றாய் போன்ற பெற்றிவாய்ந்த நிரந்தர அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந், வ. பழ. சா. பழநியப்பசெட்டியாரவர்களும், அக்குழவியின், தந்தைபோன் றொளிரும் புந்திமான்புடையரும் வடமொழி, தென்மொழி வல்லுநரும் ஆகிய ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்களும்,

வெற்றிலையிற் சுதை தீற்றி மடித்து மகார் கைக்கொடுத்து மிளிர்தங் கையாற், பற்றியுந்தும் வாய்வைத்து மகிழ்வதுபோல், என்னைநோக்கி இதனை நீ சொல்லுக எனப் பணித்தனராதலின் மனத்தூய்மை வாய்ந்த இவ்விரு பெருந்தகையாரும் நினைத்தவை யனைத்தும் இனிது நிறைவேறுமாறு பரம கருணாநிதியாகிய சிவ பெருமான் திருவருள் முன்னிற்கு மென்னுந் துணிவானே கூறப் புகுகின்றேன்.

---

## இல்லறவொழுக்கம்.

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்?"

(1) அறம்:—புல்லும் புழுவும் மிருகமும் பறவையுமாகிய பல்வகைப்பட்ட தாழ்ந்த பிறவியைவிடுத்து, ஆறறிவுடைய மக்கள் யாக்கையையெடுத்து, அறக்கொடிய மறச்செயல்களைச் செய்துவரும் இயற்கைவாய்ந்த பிற கண்டங்களை ஒருவிப், புண்ணியபூமியாகிய பரதகண்டத்தை மருவி, வேதாகம விழுக்கொடுபட்ட மெய்ச் சமயிகளாகி வாழும் நம்மவர்கள்; கடைப்பிடியாகக் கொள்ளத்தக்க உறுதிப் பொருள்கள் "அறம் பொருள் இன்பம் வீடு" என்னும் நான்குமேயாம்.

இந்நான்கும் உறுதிப்பொருள்களே யாயினும் அறத்தானே பொருளும் அவ்விரண்டானே இன்பமும் பெறற்பாலனவாதலானும், இவை யாவையும் கடந்து, சிந்தையும் மொழியும் செல்லா நிலையதே வீடாதலானும் இவற்றுள் முதற்கட்கூறிய அறமே மிகச் சிறப்பினை யுடையதாகும்,

இதனை "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்தா வழிப்படூஉந் தோற்றம்போல"

என்ற முன்னோர் மொழியால் நன்கு தெளியலாம். இவ்வறமென்பது முதனூல்களானே விதித்தன செய்தலும், விலக்கியன வொழிதலும் ஆகி "ஒழுக்கம் வழக்குத் தண்டம்" என முத்திறப்பட்டு நிகழும். இவற்றுள் வழக்கும் தண்டமும் உலகநெறி நிறுத்தற் பயத்தவாதலும், ஒழுக்கம் மக்களுயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்புடைத்தாதலும் பெறுவன. அவ்வொழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரம சரிய முதலிய நால்வகை நிலைகளினின்றும் அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவாதொழுகுதலே யாகும்.

(2). நால்வகை நிலையாவன:— பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பனவாம். இவற்றுள் கிருகஸ்தம் என்பதேஇல்லறம், இதனுள் பிரமசரியமும் அடங்கும் சந்நியாசமென்பதே துறவறம், இதனுள் வானப்பிரஸ்தமும் அடங்கும் இவ்விரண்டனுள் யாம் எடுத்துக்கொண்ட இல்லறத்தைப்பற்றி இனிக் கூறப்புகுவாம்.

(3) இல்வாழ்க்கை:— ஐயாட்டைப் பருவநதே பள்ளியிற் புக்கு முறை முறையாகக் கலைபல பயின்று குருகுல வாசஞ்செய்து பிரமசரிய நிலையின் வழுவாதொழுகிய பதினறுட்டைப் பருவங்கடந்த் ஆண்மகனுவான், தன் குலத்திற்கு ஏற்புடைத்தான குலத்தோற்றமும், எழுமையும் தொடர்வதாகிய உழுவலன்பும், எவ்வாற்றானும் தன் குலத்திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கமும், வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் ஆண்மக்கள் பொறைபோலாது மெல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் பொறையும், மனறு புலப்படாமை நிறுக்கும் நெஞ்சுடைமையும், சாந்தகுணமும், இரக்கமும், இவைபோல்வன பிறவும் அமையப் பெற்றுக் கடவுள் வழிபாடும், அடியார் பத்தியும், தாய்தந்தையர் சொற்போற்றும் பெற்றியும் வாய்ந்த பன்னீராட்டைப் பருவத்தளான ஒரு கன்னிகையை, அவளைப்பயந்த இருமுது குரவரும் இயைந்து கொடுப்பத் தன்னைப் பயந்த இருமுதுக்குரவரும் மகிழ்ந்து ஏற்ப அங்கியங்கடவுள் அறிகுறி

யாக மந்திரவகையாற் பெரியார் மன்றற் சடங்குசெய்து வைப்பக் கைப்பற்றிக் கொண்டு அறநூல்களிலே விதித்தன புரிந்து விலக்கி னவொழிந்து வடிவாலிருவரும் மனத்தாலொருவருமாகி மனை யறங்காத்தலே இல்வாழ்க்கை எனப்படும்.

(4) மன்றல்வகை:—ஒருவன் ஒருத்தியைக் கைக்கொண்டு வாழ்வதாகிய மன்றல் எட்டுவகைப் படும். அவை:—பிரமம், பிர சாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பனவாம் இவற்றுள்;

பிரமமென்பது:—ஒத்த கோத்திரத்தானும் நாற்பத்தெட்டியா ண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளா யப் பூப்பு எய்தியவளை இரண்டாம்பூப்பு எய்துமுன்னர் அணிகலனணிந்து தானமாகக் கொடுப்பது.

பிரசாபத்தியமென்பது:—மகட்கோடற் குரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசப்பொருட்கு இரட்டி தம்மகட்குஈந்து கொடுப்பது.

ஆரிடமென்பது:—தக்கானொருவற்கு ஆவும் ஆனேறும் பொ ற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றினிடையே மன்றன் மக்களை நிறீஇ ஆடையும் அணியும் அமைவுற அணிந்து நீவிரும் இவைபோற் பொலிவுற்று வாழ்வீரென நீரிற் கொடுப்பது.

தெய்வம் என்பது:—பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒருவற்கு அவ்வேள்வித்தீ முன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது.

காந்தருவமென்பது:—கொடுப்பாரும் கொள்வாரும் இன்றி ஒரு வனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் கலப்பது.

அசுரமென்பது:—கொல்லேறு கோடல் பன்றியெய்தல் வில் லேற்றுதல் முதலியன செய்து ஒருத்தியைக் கொள்வது.

இராக்கதமென்பது:—ஒருத்தியை யொருவன் வலிமையாற் கொள்வது.

பைசாசமென்பது:—மூத்தவளையும் களியாக்கினளையும் துயி ல்பவளையும் இழித்தவளையும் விகாரத்தாற் றலைக்கட்மாறிக் கொள்வது.

இவ்வெட்டனுள் முன்னைய நான்கும் உத்தம மன்றல்கள். அடுத்த இரண்டு மத்திம மன்றல்கள். அடுத்த இராக்கதம் அதம மன்றல். கனிட்டப்பட்ட பைசாசம் அதமாதமமன்றல். மேலே கூறிய மன்றல்களின் முறையே முறையாகக் கூறுவர் பெரும்பாலர். இவற்றுட் சிறிது வேறுபடுத்திக் கூறுவாருமுண்டு. அவைகளை விரிக்கிற் பெருகுமாதலின் இம்மட்டில் நிறுத்தி மேற்செல்வாம்.

5. வாழ்க்கைத் துணை.—இங்ஙனம் உத்தமமாகிய மன்றல் பெற்ற ஒருவனது இல்வாழ்க்கைக்கு இன்றியமையாச்சிறந்ததுணை நற்குணநிறைந்த கற்புடைமனைவியேயாவள். ஒருவனது இல்வாழ்க்கையின் இன்பதுன்பங்களனைத்தும் அவன் மனையாட்டியின் குணம் செயல்கட்கேற்பவேயமையும். மனைவியின் குணமகிமையே ஒருவன் இன்பமும், அவட்கு அஃதின்மையே அவன் துன்பமுமாகும். இதனாற்றான் மனைவியை வாழ்க்கைத்துணையென்றார் செந்நாப்போதார். "மனைக்கு விளக்குமடவாள" என்பதுங்காண்க. குணமற்ற மனைவியுடன்வீட்டிலிருத்தலினுங்காட்டிற்புக்கிருத்தலேநன்றென்பர். "இல்லாளாள் வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில் புலிகிடந்த தூறாய்விடும்" என்று கூறுவது ஔவைப்பிராட்டியார் திருவாக்கு.

> "மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
> காண்டற் கரியதோர் காடு" என்பது நாலடி.

வீட்டின் முறைகளைச் செவ்வனே நடத்தும் உரிமை மனைவிக்கே யுரித்தாதலை மனை, மனைவி மனையாட்டி இல் இல்லவள் குடும்பினி என்னும் பெயர்களே வலியுறுத்தாநிற்கும்.

௬. வாழ்க்கைத்துணைக்கு வேண்டுங்குணங்கள்.—துறந்தார்ப் பேணலும் வறுமையும் செல்வமுங் குறியாது விருந்தினரைப்பாதுகாத்து அவர் மனமகிழ்வித்தலும், வறியார்மாட்டு அருளுடைமையும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களைப் பருவமறிந்து தொகுத்தலும், வருவாய்க்கு ஏற்பச்செலவிடலும், அட்டிற் றொழில்வன்மையும், மலர்ந்த முகமும், குளிர்ந்த மொழியும், கொண்

டோன் புரக்கும் நண்புடை மாந்தரும் சுற்றத்தாரும் குஞ்சர முதலிய காலேசங்களும் பல்படை மாக்களும் உள்ளிட்டோரை யுண்பித்து அவர்களுண்டபின் தானுண்டலும், கொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும் அவனையின்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவர் கற்பித்தவாறும் அந்தணர்திறத்தும் சான்றோர் தேளத்தும் ஐயர் பாங்கினும் அமரர்ச்சுட்டியும் இன்னவாறு ஒழுகுகவெனத் தலைமகன் கற்பித்தவாறும் ஒழுகுவதாகிய கற்பும், அதிதி பூசையில் விருப்பும், அல்லன செய்தலில்வெறுப்பும், இன்னோரன்ன நல்லனபலவும் வாழ்க்கைத்துணைக்கு வேண்டுங்குணங்களாம்.

இத்தகைய நற்குண நற்செயல்களையுடைய வாழ்க்கைத்துணையமையப்பெறின் அவ்வில்வாழ்க்கைக்கு இல்லாதது யாதுமில்லை. அவளிடம் இக்குணங்களில்லையேல் எத்துணைப் பெருஞ்செல்வமுத் திருப்பினும் உள்ளது யாதுமில்லை.

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை."

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"—என்னுந்

தெய்வ நூல் உரைகளானே மேலே கூறியவை வலியுறுத்தப்படுமாது காண்க.

7. இல்வாழ்க்கையின்-பெருமை.—ஒருவனது இல்வாழ்க்கையானது அன்பாகிய பண்பையும் அறனாகிய பயனையும் உடையதாகி பிரமசரியம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் முந்நிலைக்கண் நிற்பார்க்கும் பசி, நோய், குளிர்முதலிய துன்பங்களை நீங்க உண்டியும் மருந்தும் உறையுளுமாகியகொடுத்துப் பாதுகாத்தலும், களைகணைவராற் றுறக்கப்பட்டு யாதொரு பற்றுக்கோடுமின்றி நிறபவர்கட்கும் நல்குர்ந்தோர்கட்கும் இறந்தவர்கட்கும் களைகணாகிநின்று வேண்டுவன செய்தலும், உண்டி முதலியன கொடுத்தலும், நீர்க்கடன் முதலியன செய்தலும் ஆகிய எல்லா உபகாரச் செயல்கட்கும் பிறப்பிடமாகி விளங்குந்தன்மை

யது. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் என்னும் நால்வகையா ரையும் பாதுகாத்து அதன் பொருட்டாகத்தன்னையும் பாதுகாக்கும் உரிமை பெற்றுள்ளது. மனத்தையும் புலன்களையும் ஒறுத்தடக்க வேண்டாது ஐம்புலஇன் பங்களாரத்துய்த்து மறுமைபேற்றினையும் பெறுவதற்குரிமைவாய்ந்ததுடன் தன் நோயையும் பிறர் நோயையு ம் நீக்கி வாழ்தலின் தவத்தினுஞ் சிறந்து தலைமைப்பாடெய்திய து. இங்ஙனம் பல்லாற்றானும் சிறந்து மேம்பட்டு நிற்றலால் இலல றம் துறவறம் என்னும் இரண்டற்கும் பொதுவாகிய அறம் என னு ம் மொழியை இல்லறமாகிய தனக்கே உரிமைப்படுத்தி "அறனென ப்பட்டதே இல்வாழ்க்கை" எனவும், "அறனெனப்பட்டது இல்வாழ் க்கையே" எனவும் முறையே ஆசிரியர் திருவள்ளுவரும் பரிமேலழ கரும் பணித்தருளப்பெற்ற பெரும் பேறுடையது.

"இத்தகைய நால்வர்களின் மூவருக்கு மிறந்தார்க்கு
மத்தமுத லற்றோர்க்கு மாதார மாதலினு
முத்தமமா மில்லறமே வாழ்வினுக்கு முயர்கதிக்கும்
வித்துமாந் துறவறத்தின் வேருமா மெனும்வேதம்"

"துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி
யிறந்தவர்கள் காமுறு மிருங்கடனியற்றி
யறம்பலவு மாற்றிவிருந் தோமபுமுறை யல்லாற்
பிறந்தநெறி யாதுளதோர் பேருதவி யாதோ"

என்பனவாதியுவாக ஆன்றோர் பலரானும் உயர்த்துக்கூறிப் புகழப் பெற்றது.

8. அறம் செய்யும் முறை:—இங்ஙனமாகிய இல்லறத்தை மே ற்கொண்ட தலைவனும் தலைவியும் உருவத்தால் இருவகைப்பட்டுத் தோன்றினும் மனத்தால்ஒரு தன்மைப்பட்டு நிற்கவேண்டும். இவ் விருவரும் மனவொற்றுமைப்பட்டு நில்லாவழி அவ்வாழ்க்கை ஒரு சிறிதுஞ்சிறப்புற நடவாது. இவ்விருவரின் மனவொற்றுமையை ப்பற்றிக் கூறுங்கால் தருமமென்னுஞ் சரக்கை யேற்றிய இல்வா ழ்க்கை யென்னுஞ் சகடத்தைத் தலைவனும் தலைவியுமாகிய எருத்

துகள் கருமமென்னும் நுகத்தைப்பற்றி முறையாக ஈர்த்தால் அச்சகடம் எத்துணைத்தூரமுஞ் செல்லும். இவ் இருவருள் ஒருவர் செல்லும் நெறியையே மற்றவரும் பற்றிச்செல்லாது வேறுபாடு சிறிதுறினும் அச்சகடம் நடவாது என்று உவமித்து—

"தருமமெனும் பண்டமிடுஞ் சகடமா மனைவாழ்க்கை
கருமநுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமெனும்
இருவராய்ப் பூண்டீர்ப்பி னெத்துணைத்தூ ரமுஞ்செல்லு
மொருவராய்ப் பூண்டீர்ப்பி னோரிறையுஞ் செல்லாதால்"

"காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கருங்
கண்ணிரண்டு மொன்றையே காண்"

"சகலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்பன வாதியவாக நம்முன்னோரான நல்லறிவாளர் பலரும் கூறுவாராயினர். கருத்தொருமித்து வாழ்பவள்தான் இல்லறத்துக்குரியவளாவள். இங்ஙனமின்றிக் கவர்பட்டசிந்தையுடைய பொதுமகளிரை "இருமனப்பெண்டிர்" என்று கூறுதலும் இங்குக் கவனித்தற்பாலதேயாம்.

9. தலைவியைப் பாதுகாக்குமுறை:— அன்னை தந்தை உடன்பிறந்தார் முதலிய யாவரையும் விட்டுத் தன்னையே பற்றுகோடாகக்கொண்டு வந்த தலைவியை அவளின் அன்னையைப்போல அன்புபாராட்டிக் காத்தல் தலைமகன் கடனாகும். மாதுலன் மாமி முதலானவரும் அவ்வாறே கருதி நடத்துங்கடப்பாடுடையராவர்.

(தொடரும்)

மு. ரா. கந்தசாமிக்கவிராயர், பத்திராதிபர்.

# திருவெம்பாவையாராய்ச்சி.

[ மூ. இராகவையங்காரவர்கள் எழுதி மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையில் வாசித்தவியாசம்.]

புண்யபூமியாகிய பரதகண்டத்துவாழும் நன்மக்களெல்லாம், அநாதிகாலமாக, தத்தம் வருணாச்சிரம முறைக்கேற்பப் பற்பல தர்மாநுஷ்டானங்களைக் கைக்கொண்டு வாழும் இயல்பினரென்பது உலகமறிந்த தொன்றாம். உரியகர்மங்களை ஊக்கத்துடன் போற்றி வரும் இடமாதல் பற்றியே, இப்பாரதவர்ஷமும் கர்மபூமி எனப்பட்டது. இக்கர்மங்களெல்லாம் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற்பொருட்டுச் செய்யப்படுவனவாகும். இவ்விரதங்கள் அவ்வவ்வாச்ரம நிலைக்கேற்ப எண்ணிறந்தன. கிருகஸ்தாச்ரமி கொண்டொழுகும் கர்மவ்ரதங்கள் பெரும்பாலவும், உரிய தெய்வத்தைப்பற்றியனவாய் இம்மை மறுமைப்பயன் கருதி நிகழ்த்தப் படுகின்றன. இவற்றில் வேதங்களால் விதிக்கப்பெற்ற யாகாதிவிரதங்களோடுய சிஷ்டாசாரமேபற்றி அநாதிகாலமாக நடைபெறும் நோன்புகளும் உள்ளன. பங்குனிமாதத்துப் பௌர்ணமைக்குப்பின் நடைபெறுவதாம் ஹோலா அல்லது ஹோளாகமென்று சொல்லப்பெறுவதுமான வஸந்தோத்சவமுதலியவற்றை வேதவிதியின்றிச் சிஷ்டாசாரமே பற்றிய தென்பர். மீமாம்ஸகர் சிஷ்டாசார ஸித்தமானவற்றை ஸ்தாபிப்பதற்கு "ஹோளாதிகரணநியாயம்" என, இவ்வஸந்தோத்சவத்தினடியாக ஒரு நியாயங் கூறுவதாலும் இதனைக் காணலாம்.

இவ்வாறு சிஷ்டாசாரமபற்றி இல்லறத்தார் நிகழ்த்தும் விரதங்களிலே 'பாவைநோன்பு' என்பதொன்று பண்டைக்காலந்தொட்டு நடைபெற்றுவந்ததென்பது, திருவாதவூரடிகளருளிய "திருவெம்பாவை" யாலும், வில்லிபுத்தூர் ஆண்டாள் அருளிய திருப்பாவையாலும் விளங்குகின்றது.

இனி, இந்நோன்பின் ஆதிவரலாறு யாது? இஃது எக்காலத்தில் நிகழ்த்தப்படுவது? எந்த தெய்வத்தைப்பற்றியது? இதன் விதிகள் யாவை? என்ற விஷயங்களை இங்கே சிறிது ஆராய்வேன். ஆராயுமுன்பு, ஒருவிஷயம் ஞாபகத்தில் வைக்கத்தக்கது. திருவெம்பாவை உத்ஸவமானது, சைவர்களாலும் வைணவர்களாலும் விசேஷ

மாக நடைபெற்று வருவதில், அவ்வவர் தத்தம் மதிதிறத்திற்கேற்ப வேறுவேறு ஐதிகங்கள் கூறக் கூடும். அப்படிச் சொல்லும் விஷயங்களில் இன்னார்கூற்றே உண்மையென்று ஒரு சார்பாக சித்தாந்தப்படுத்துவதற்கு நான் இங்குவரவில்லை. ஆனால் நான் கூறப்புகுந்ததென்னெனில், இந்நோன்பு விஷயமாக முன்னூல்களாலும் பிறவற்றாலும் தெரிந்த செய்திகளைக்கொண்டு, அதன் விஷயத்தை இம் மகா சபைமுன் ஆராயமுயல்வதேயன்றிப் பிறிதன்று. திருவெம்பாவை யனுஷ்டானம் சைவவைணவர்க்குள் சிறப்புவாய்ந்து நடைபெறுதலால், அவ்வனுஷ்டானத்தின் வரலாற்றை அறிய முயல்வது நமது முக்கிய கடமையேயன்றோ? ஆதலால் அறிஞர்காள் யான்தெரிவிப்பதைச் செவிக்கொள வேண்டுகிறேன்.

௩. திருவாதவூரடிகள் அருளிய திருவெம்பாவை ௨௰-பாசுரங்கள் உடையது. இஃது, அவ்வடிகள் திருவண்ணாமலைசென்று சிவபிரானைவணங்கி, அத்திருப்பதியில்வசித்து வருங்காலத்தே, மார்கழி மாதம் வருதலும், மாதரெல்லாரும் திருவாதிரை உத்ஸவத்துக்கு முற்படப் பத்து தினங்களுள்ளகாலத்தில் வீடுகள்தோறும் போய் ஒருத்தியை ஒருத்தியும் பலருமாகச்சென்று துயிலுணர்த்தி அழைத்துக்கொண்டு கூட்டங் கூட்டமாக நீராடக்கண்டு, அவர்கள்சொன்னதாகச் சொல்லியது என்ப. இதனைத் திருவாதவூரர் புராணம் திருவம்பலச் சருக்கத்தே:—

"வென்றிடுங் கன்னி மேதிச் சென்னிவிக் கிரமன் றன்னைக்
கொன்றதன் பாவந் தீரக் குறித்திட வருள்வாய் போற்றி
அன்றுவர் தென்னையாளு மணியண்ணா மலையாய் போற்றி
என்றுதம் பரிவாலேத்தி யிறைஞ்சியங் குறையு நாளில்"

"மாதர் கோன் மாதரெல்லா மார்கழித் திங்க டன்னில்
ஆதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங்க ளெல்லாம்
மேதகு மனைக டோறு மழைத்திருள் விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றட மாடல் செய்வார்"

"அன்னவ ரியல்பு கண்டா ரங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம் பாவை வாசகம் பேசிப் பின்னர்
கன்னியர் பாடி யாடுங் கவின்கொளம் மனைகண் டன்னார்
பன்னியபாடலாகவம்மனைப்பாடல்செய்தார்"

என்வரும் பாடல்களால் அறியலாம். இனி இத்திருவெம்பாவைக்கு வேறு கருத்தொன்றுங் கூறுவதுண்டு. அதாவது:—மார்கழி-மீ தேவர்கட்கு உதயகாலமாய்ச் சிருஷ்டிக்கேதுவா யிருப்பதாதலால், அக்காலத்தே பிரபஞ்ச அநுக்கிரக காரியமாக மனோன்மனி முதல் வாமையீறான நவசத்திகளும் ஒருவரையொருவர் முறையே பிரேரி க்க, அப்பிரேரகத்தினாற் பிரபஞ்சகாரிய நடவாநிற்குமெனபதும், இவ்வாறு நவசத்திகளும் ஒருவரையொருவர் பிரேரிக்கும் முறை யே திருவெம்பாவையில் துயிலுணர்த்துவதாகக் கூறப்பட்ட தென பதுமேயாம. இத்திருவெம்பாவைப் பாசுரங்களின் இறுதிச் சொ ல்லாம் "எம்பாவாய்" என்றே முடிவனவாகும்.

இனி, சிவனடியார்களிற் காரைக்காலம்மையார் போற் றிருமா லடியார்களுட் பெண்பாலராய், ஆண்டாள் என்று திருநாமம்பெற்ற, வில்லிபுத்தூர்க் கோதையார் அருளிச்செயல்களில் திருப்பாவை. என்ப தொன்றுண்டு. இது முப்பது பாசுரங்களில் அமைந்தது. இத்திருப்பாவைக்கு, ஸ்ரீ பெரியவச்சான் பிள்ளை என்ற பெரியார் அரியதொரு வியாக்யானம் மணிப்பிரவாள நடையில் அருளிச் செய் துள்ளார். பாவை நோன்பின் வரலாறு அடியில்வருமாறு அவ்வியா க்யானத்தில் அவதாரிகையில் எழுதப்பட்டிருக்கிறது:—

ஸர்வேச்வரன் திருவாய்ப்பாடியிலே கிருஷ்ணனாய் வந்து திரு வவதாரமபண்ணி, தன்னுடைய ஸௌந்தர்யாதிகளும குணசேஷ்டி தங்களாலுமாக பஞ்சலக்ஷங் குடியிலுள்ள பெண்களைத் தோற்பித் துக்கொண்டு, ஒத்தபருவத்துப்பெண்களுந் தானுமாக வளர்ந்தருளு கிற காலத்திலே, தானும ப்ராப்த யௌவனனாய் அவர்களுக்கும் யௌவனம் வந்து தலைக்கட்டினவாறே, கோபவ்ருத்தரெல்லாருங் கூடிக் "கிருஷ்ணன் தூர்த்தனாய் இராநின்றான்; இவன் முகத்திலே பெண்கள் விழிக்கலாகாது" என்று பார்த்து, இவர்களை நிலவறைகளி லே அடைக்க, பெண்களும் கிருஷ்ணனும் பண்ணின்பாக்யததாலே வர்ஷமின்றிக்கே ஒழிய, பெண்களிருந்து மனோரதிக்கிறார்கள்:— "கோ.தனராயிருக்கிற இடையர்கள் வருஷார்த்தமாக நம்மை நோ ற்கச்சொல்லக்கடவர்கள். கிருஷ்ணன் இதற்குக் கடைக்கட்டுறு, கவுஞ் சடவன். நமக்கொரு குறைமில்லை" என்று பெண்கள் பிரிகைக

ளாய் தரிக்கிருக்கிற தசையிலே வருஷமின்றிக்கேயிருக்கிறபடியைக் கண்டு கோபவ்ருத்தரெல்லாருந் திரண்டு, 'பசுக்களும் மனுஷ்யரும் பிழைக்கும் விரகு ஏதோ' என்று பார்த்து, வருஷார்த்தமாக நோற்க வருஷமுண்டாம் என்று (கருதி)—"இவ்வூரில் பெண்களடைய நோற்கக் கடவர்கள்; இந்நோன்புக்கு இங்குத்தைக்கு அதிபனான நந்தகோபர்மகன் கடகனவன்" என்று அத்யவஸித்துப் பெண்பிள்ளைகளை அடையவழைத்துக் கிருஷ்ணனையும் அழைத்து, பெண்களை நோற்கச்சொல்லி இவர்கள் நோன்புக்கு நீ கடகனாகவேணுமென்று கிருஷ்ணனை அபேக்ஷிக்க, அவன் 'எனக்கு க்ஷமமன்று' என்ன, இத்தனையுஞ் செய்யவேணுமென்று மறுக்கவொண்ணாதபடி (அவர்கள்) நிர்ப்பந்திக்க, அவனும் இசைந்த பின்பு, எல்லாருந் திரளவிருந்து "பெண்கள் நோற்பார்: அதுக்குவேண்டுவது கிருஷ்ணன் ஸஹகரித்துக் கொடுப்பான்" என்று ஓமறைந்து, கிருஷ்ணன் கையிலே பெண்களைக் காட்டிக்கொடுத்து கோபவ்ருத்தரெல்லாரும் போனபின்பு, பெண்களுங் கிருஷ்ணனுங் கூடவிருந்து "திருக்குரவை கோத்த ராத்ரிபோலப் பெண்காள்! இதுவும் நமக்கொரு ராத்ரியே" என்று கிருஷ்ணன் கொண்டாடி "இனி அசிர்ப்புப்பிறக்கவைகல் இருப்போமல்லோம்; இப்போதே எல்லோரும்போய் அபராத்திரியிலேவந்து எழுப்புங்கோள், நோன்புக்குக் குளிக்கலாம்படி" என்றருளிச்செய்து, கிருஷ்ணனும் பெண்களைப்பிரிந்துபோய்த் தரிக்கமாட்டாமே நப்பின்னைப்பிராட்டி திருமாளிகையிலே புக்கான்; பெண்களும் பரஸ்பர ஸம்ஸ்லேஷத்தாலே புக்கு உறங்கப்புக்கவிடத்தில் கண்ணுறங்காமையாலே முற்படவுணர்ந்தவர்கள் கிருஷ்ணகுணசேஷ்டிதங்களை நினைத்து எழுந்திருக்கமாட்டாதே கிடக்கிறபவர்களை உணர்த்த எல்லாருங்கூடி உத்தேச்யமான ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகையிலே சென்று கிருஷ்ணனை எழுப்பித் தங்கள் அபேக்ஷிதம் பெற்றுமுடிகிறது" என்பதே.

இவ்வாறு, கோகுலத்து ஆயர்கள், மழை பெய்யாக்குறையை நீக்கவேண்டி, கண்ணபிரானைத் தலைமையாகநியமித்துத் தங்கள் பெண்களை மார்கழி நோன்பு நோற்கச்சொல்ல, அதற்கிசைந்து அவர்கள் வைகறையிலெழுந்து பெருமானையும் தோழிமார்களையும்

துயிலுணர்த்திக் கூட்டிக்கொண்டு யமுனாநதியில் மார்கழி நீராடி நோற்ற வரலாற்றையே ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை முப்பது பாசுரங்களிலும் அருளிச்செய்தமை காண்க. ஆனால் இச்சரித்திரம் கூறப்படுவதற்கு நூற்பிரமாணம் யாது? என்ற கேள்வி இங்கே உண்டாகக்கூடும். இதற்கு பாகவததத்தில் தனியாக ஒரு உபாக்யானமே கூறப்படுதல் பெரிதுங் கவனிக்கத்தக்கது. பாகவதம தசமஸ்கந்தம்22-ம் அத்யாயத்தே அடியில்வரும் சரிதம் கூறப்படுகிறது. திருவாதவூரடிகளது திருவெம்பாவை வரலாற்றை ஆராய்ச்சி செய்வதற்கு இவ்வுபாக்யானம் இன்றியமையாததாதலால் பாகவதத்துள்ளபடியே அதன் மொழிபெயர்ப்பைக் கீழே தருகின்றேன்.

7. "அவ்வாறு, வருஷகால சரத்காலங்களில் ஸ்ரீ பகவான் லீலா விநோதமாக வேணுகானங்களைச் செய்துகொண்டிருக்குங் காலத்தே, சூரியபகவான் தனுராசியிற் பிரவேசித்தான். ஏமந்தருதுவாகிய பனிக்காலத்தில் வாடைக்காற்றுக் குளிர்ந்து வீசியது ஆகாயவீதிகளில் மேகங்கள் சஞ்சரித்துகொண்டிருந்தன.

"இத்தகைய ஏமந்தருதுவில், கோகுலத்துள்ள ஆயர்களெல்லாம் தங்கள் வமிசங்களுங் கோக்களும் விருத்தியடையும்பொருட்டுத் தங்கள் குலதர்மப்படி அவரவர்கள் வீட்டிலுள்ள கன்னியா ஸ்திரீகளை நியமித்து அவர்களைக்கொண்டு, தங்கள் குலதெய்வமாக விளங்கும் கௌரீதேவியைக் குறித்து விரதங்கள் அனுஷ்டிக்கும்படி செய்வது வழக்கமானபடியால், அவ்வருஷத்து அந்த ஹேமந்தருதுவில் மாதங்களுள் உத்தமமாகிய தனுர்மாதத்தே 1வ முதல் 30-வ வரைக்கும் நோன்பு நோற்குமாறு ஸ்ரீநந்தகோபர் உபநந்தர் முதலிய எல்லா ஆயர்களும் அந்த ஸ்திரீஜனங்கட்கு நியமித்தார்கள். அக்காலத்து அந்த கோபகன்னியரெல்லாம் பகவானிடத்துப் பக்தி மிக்கவராய், கண்ணனே தங்கள் மணாளனாகவேண்டுமென்று நெடுங்காலந் தியானித்துவருபவர் ஆதலால், நல்ல சமயம் வாய்த்ததென்று களித்தவர்களாய், ஸ்ரீகிருஷ்ண குண கீர்த்தனங்களைச் செய்து கொண்டு, காளிந்திநதி தீரத்தில் ஒன்றுசேர்ந்து நீராடி அந்நதிக்கரையிலே திவ்யமான ஈரநுண்மணலைக்கூட்டி ஸ்ரீபகவதீ தேவி ஸ்வரூபத்தை நிருமித்து ஆராதிப்பாராயினர்.

"எவ்வாறெனின்:— வெவ்வேறு வகையான திவ்யாலங்காரங்களையும், மஞ்சட்பொடி முதலிய விசித்திர சுண்ணங்களையும், மிகவும் பரிமளம் வீசும் புஷ்பகந்தங்களையும், தூப தீபங்களையும், நாநாவித மாதுர்ய பக்ஷ்ய போஜ்யாதிகளையும், கந்தமூல பலங்களையும் ஷோடசோபசாரங்களினால் ஸமர்ப்பித்து மிக்க பக்தியுடன் கைகூப்பிக்கொண்டு எதிர்நின்று ஒவ்வொருவருந் தனித்தனியே "ஓ பகவதீ, ஓ காத்யாயனீ தேவி, ஓ மாமாயீ, ஓ மகாயோகினீ, ஓ ஆதீசுவரீ, ஓ கௌரீ, ஓ பவானீ, ஓ மஹாதேவ தேவி! ஸ்ரீ புருஷோத்தமரானவர் எங்கட்கு மணாளராக லபிக்கமாத்திரத்தில், பால், தயிர், வெண்ணெய், மஞ்சட்பொடி, சுகந்த தூளனங்கள், மஞ்சணீர் இவை முதலாய மங்கள திரவியங்களினால் திருமஞ்சனமாட்டி நிகிலலோக சுபகரங்களாகிய நாநாவித மங்களவாத்யங்களுடன் ஷோடசோபசாரங்களைச்செய்து வணங்குகின்றோம்.— என்று பிரார்த்தனையால் சங்கேதஞ்செய்துகொண்டு உபவாசர்களானார்கள்.

"இந்த தனுர்மாதம் 30-நாளும் இங்ஙனம் முன்றப்படியே பஞ்சபஞ்ச உஷத்காலத்திற்கு முன்னே எழுந்து, அவரவர் முற்றத்தில் நின்று நாமதேயங்களைச்சொல்லி எழுப்பி அழைத்துக்கொண்டு யாவருந் தங்கள் குசபாரங்கள் அசைந்தாடவும், இடைகள் துவளவும், மத்தகஜங்களைப் போலவும் ராஜஹம்சங்களைப் போலவும் ஒய்யார நடை நடந்து ஸ்ரீ கிருஷ்ணார்மாங்கிதங்களான ஸத் கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டும் சந்தோஷமிக்கவராய் ஒருவர்க்கொருவர் கைகோத்துக்கொண்டும், யமுனா நதி தீரத்திற்குவந்து மிகவும் பக்தி பூர்வமாக ஸ்ரீ காத்யாயனீ தேவியை ஏத்தி, மீண்டு தங்கள் மாளிகையிற்சேர்ந்து ஹவிசுகளைப் புஜித்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு 30- நாளும் 'விரத யாத்திரையாகச்செல்ல; இறுதிநாளில், முன்போலவே கோபகன்னியரெல்லாம் ஸ்ரீ கிருஷ்ண குண கீர்த்தனங்களைச் செய்துகொண்டு புன்னகையுடன் நதிதீரத்தருகுவந்து பரிசுத்தமான ஏகாந்தப் பிரதேசத்திற் சேர்ந்தார்கள்——எனக்காண்க.

இவ்வாறு பாகவதத்துக்கண்ட உபாக்கியானத்தில், நாடு செழிக்கவும் தங்கள் அபேக்ஷைகள் நிறைவேறவும் வேண்டி, கன்னிகைகள், காத்யாயனீ தேவியைக்குறித்து மார்கழித்திங்கள் முழுதும் நோன்பு நோற்பதும் அதன்பொருட்டு அவர்கள் வைகறையி

லெழுந்து ஒருவரையொருவர் துயிலெழுப்பிச்சென்று நீராடி, கௌரி தேவியின் பிரதிமையொன்றைத்தீரத்தில் சமைத்து அதனை வணங்கித் தத்தம் இஹாபீஷ்டங்கள் நிறைவேறிக் களிப்பதும் பழைய காலத்து வழக்கங்களென்பது வெளியாகின்றது. ஆகவே மார்கழிமாதம முழுதும் கன்னிகைகள் நீராடி நோற்கும் நோன்பு காத்யாயனீதேவியைப்பற்றிய தென்பதற்கு வைஷ்ணவ புராணத்திற் சிறந்ததொரு சான்று காணப்பட்டது.

இவ்வாறு பாகவத பிரமாணத்தின்படி, தேவியை நோக்கி ஆய்ச்சியர் நிகழ்த்திய மார்கழி நோன்பே ஆண்டாளருளிய திருப்பாவைக்கு மூலமாகும். ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானமும் மேற்கூறிய பாகவத உபாக்யானத்தையே இந்நோன்புக்கடியாகக் கூறுதலைத் திருப்பாவை வியாக்யான அவதாரிகையிற் காணலாம். ஆனால், இந்நோன்பு தேவி சம்பந்தமாகச் செய்யப்பட்டது என்பதற்கு ஷை திருப்பாவை மூலத்திற் றெளிவான ஆதாரங் காணப்படாததோடு, அதன் வியாக்யானமும் அந்த தேவியைப் பற்றி ஒன்றும் விவரித்திலது. எனினும், திருப்பாவைப் பாசுரங்களின் ஈறுதோறும் "எம்பாவாய்" என வரும் சொற்றொடர், பாகவதத்துக்கண்டபடி ஈரநுண்மணலாற் சமைக்கப்பட்ட கௌரி தேவியின் பிரதிமையை நோக்கிப் பெண்கள் விளிப்பதாகக்கொள்ளுமிடத்து, அத்தேவியின் விஷயம் மூலத்திலும் கூறப்பட்டதாகவே முடியும். ["எம்பாவை" என்பது எமது பெண்தெய்வம் என்று பொருள் தரும். பாவைக்கூத்து என்பது திருமகள் கூத்தாதலும், கொல்லிப்பாவை—சொல்லியிலுள்ள பெண் தெய்வமாதலும் இங்கு நோக்கத்தக்கவை.]

"பாவைக்குச் செய்யுங்கிரிசைகள் கேளீரோ" "நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்" "பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்"—என ஒரு பிரதிமையை வைத்து ஆராதித்தே இந்நோன்பு நடைபெறுவதாகக் கூறப்படுகின்றமை நோக்கத்தக்கது. அப்பிரதிமை யாது? பாகவதத்துக் கண்டபடி காத்யாயனீ தேவியேயன்றிப் பிறிதில்லை என்க. ஆனால், திருமால் பக்தியிற் சிறந்த ஆண்டாள், கௌரி விரதத்தைப்பற்றிப் பாடுவரோ எனின், அப்பெரியார், மன்மத நோன்பு முதலியவற்றை, தம்மிஷ்டபூர்த்திக்காக எடுத்துப்புகழ்தலால், அதுபோல, இச்சக்தி விரதமும் திருமாலையடையவேண்டிச் செய்யப்பட்டதொன்றாதலால், இதனில், சம்ப்ரதாய விரோதமில்லையென்க.

(இன்னும் வரும்)

# உண்மை யுடைமை.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

(இதன்பொருள்.) "எல்லா விளக்கும் விளக்கு அல்ல-புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குக்களெல்லாம் விளக்காகா:— சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு- துறவானமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே."

இது தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரால் கூறப்பட்டது. உலகத்தார் விளக்குக்களாகிய ஞாயிறு திங்கள் தீ யென்பன வற்றாற் போகாத இருளென்கின்ற அறியாமையைப் பொய்யாமை யாகிய விளக்கே நீக்கலின் பொய்யாவிளக்கே விளக்கென்றாரென்க. இங்ஙனம் இவர் கூறியவாற்றால் ஞாயிறு திங்கள் தீ யென்கிற விளக்குக்கள் மூன்றினும் இவ்விளக்கே சிறப்புடைய தென்க.

ஒருவன் இம்மையிலே ஆவசியகந் தேடற்பாலது யாதென நோக்குமிடத்துப் பொய்சொல்லா திருத்தலாகிய ஒன்றேயாம். பொய் சொல்பவன் யாவரானும் இகழப்படுவான். உண்மை பேசுபவன் யாவரானும் புகழப்படுவான். பொய் சொல்லுபவன் எச்சபையிலாயினும் செல்லக்கூசுவான. உண்மை பேசுபவன் எச்சபையிலாயினும் கூசாது செல்வான். பொய்சொல்பவன் ஒருவரானும நன்கு மதிக்கப்படமாட்டான்; உண்மை பேசுபவனெல்லோரானும நன்கு மதிக்கப்படுவான். பொய் சொல்பவன் இம்மையிலே இவ்விதமாக இகழப்படுதலேயன்றி, மறுமையிலுஞ் சகித்தற்கரிய துன்பங்களை அடைவான்; உண்மை பேசுபவன் இம்மையிலே இவ்வாறாகிய கீர்த்திகளை யடைதலேயன்றி, மறுமையில் அளவிடற்கரிய இன்பங்களை அநுபவிப்பான். உண்மை பேசுபவன் இம்மையிலே உண்மை பேசுதல் காரணமாகத் தன்னுடைய பொருள்களெல்லா வற்றையு மிழநதுவிட நேரினும் அதனாலே மறுமையிலே அநேக இன்பங்களை அநுபவிப்பான.

இதற்கு உதாரணமாக: "அரிச்சந்திர" னென்னும் பெயரிய அரசனொருவ னிருந்தான். அவன் பொய்சொல்ல லாகாதென்ற விரதத்தைப் பூண்டவன் இவ்விதமாகவே இவன் நாடோறும

பொய்சொல்லாது நடந்து வந்தான். அப்படி நடக்கும் நாட்களில் ஒரு நாள் விசுவாமித்திர னெனும் பெயரிய ஒரு முனிவர் வந்து, "அரசனே! உன்னிடமுள்ள திரவியங்களை எனக்குக் கொடு" என்று கேட்டார். அப்பொழுது அரசன் "இம்முனிவர் கேட்டபடி திரவியங்களைக் கொடாதுவிடின் நம்முடைய விரதம் பொய்த்துவிடு மென நினைத்து," அம்முனிவர் கேட்ட திரவிய முழுவதையுங் கொடுத்துவிட்டான். அந்த விசுவாமித்திர முனிவரானவர் தான் பெற்ற திரவியங்களெல்லாவற்றையுந் திரும்பவும் அவ்வரசனிட மொப்பித்து "நான் கேட்ட காலத்தில் தருவாய் என"ச் சொல்லிச் சென்றனர். சிலகாலங் கழிந்தபின்பு வந்து, அரசனே! நான் முன்னமே உன்னிடத்தில் வைத்திருக்கும்படி தந்த திரவியங்களை யெல்லாம் இப்பொழுது என்னிட மொப்பி" என, அதைக் கேட்ட அரசன் "நான் இம்முனிவருடைய திரவியங்களைக் கொடாது விடின் பொய்யனாவேனே" யென நினைத்து; அத்திரவியங்கள் முழுவதையுங் கொண்டுவந்து அவரிட மொப்பித்தான். திரும்பவும் அம்முனிவர் சொல்லியபடி அவ் அரசன், தன்னுடைய மனைவி முதலிய யாவரையும் விற்றும, தன்னை விற்றும் தன் சொல்லை நிறைவேற்றினான்.

இவ்வாறு இவன் பொய்சொல்லாது உண்மையாக நடந்தமை காரணமாக இனனும் யாவராலும் புகழ்ந்துரைக்கப் பட்டுத் தீபம் போல யாவருக்கும் பிரகாசமாக இன்றுவரையுந் தெரியப் படுகிறான்.

பொய் காரணமாகவே மறறைய குற்றங்களும் மனிதனை அடைகின்றன. பொய் பேசுபவன் ஏனைய குறறங்களைச் செய்தற்கும் ஒரு போதுங் கூசமாட்டான். பொய் பேசாதவன் ஏனைய குற்றங்களையுஞ் செய்தற்கு மிகஅஞ்சுவான். பொய்யும் ஒருவனுக்கு குற்றமற்ற நன்மை பயக்குமிடத்துக் கூறுவது தகுதியே யாகும். அஙஙனமாகுமிடத்துக் கூறபபட்ட வாய்மையாலும நன்மையில்லை. அதனாலவன் கொடிய நரகத்தை யடைந்து வருந்துவான் என்பது திண்ணம. இதற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" என்றாரென்க.

இந்தப் பொய்யாமையானது சான்றோர்க்கே விளக்காகின்றது. "களவெடு. பொய் சொல்லாதே" எனப் பெரியோரும் கூறினார். ஆதலினால் ஒருவன் தன்வறுமையின் நிமித்தம் ஒருகளவை யெடுத்தகாலத்தும் பொய்சொல்லாது "யானே என் வறுமையின் நிமித்தம் அப்பொருள்களை எடுத்தேன்" என உண்மையையே சொல்லல் தகுதியாகும். அவ்வுண்மை சொல்லியதனால் அவனுக்கு ஒரு கேடும் வரமாட்டாது. இன்னும் நன்மையே உண்டாகும்.

பொய் சொல்லாதிருத்தலே ஒருவனுக்கு விளக்கு; ஏனெனில் தீபமானது தனது ஒளியினால் பக்கத்துள்ள இருட் கூட்டங்களைக் கெடுக்கின்றது. அதுபோல உண்மை பேசுவோனும் அதனால் தன்னிடத்துள்ள குற்றங்களெல்லாங் களையப்பட்டு யாவராலும் மதிக்கப்படுகிறான். அவ்வித மதிப்புண்டாதற்குக் காரணம் பொய்சொல்லாமையே என்பது சொல்லவும் வேண்டுமோ?

தற்காலத்திலே பொய் பேசுவோரே அதிகம்; உண்மை சொல்வோர் மிகச் சிலரேயாவர். உண்மை பேசுவோனுக்கு அவ்வுண்மையொன்றுமே துணையன்றி வேறொரு துணையும் வேண்டியதில்லை. இன்னும் அவ்வுண்மை இன்றியமையாப் பிரயோசனத்தைக்கொடுத்து நன்மையையும் உண்டாக்குகின்றது.

முடவனுக்கு ஊன்றுகோலானது உற்றவிடத்து எவ்வளவு நன்மையை உண்டாக்குகின்றதோ, அதுபோல ஒருவனுக்கு உண்மையானது உற்றவிடத் துதவுகின்றது. உண்மை பேசுபவன் நியாயாதிபதி முதலியவர்களுடைய தண்டனைக்கு ஆளாகமாட்டான். ஏனெனில் ஒரு குற்றத்தைச் செய்து அதனாற் றண்டனைக் காட்பட்டவன் "எனது கோபமிகுதியால் யானே அதைச் செய்தேன்" என்று கூறுவானாயின் அற்ப தண்டத்துடன் விடப்படுவான். அவ்விதமாகவே உண்மை பேசுவோனுக்கு எவ்வளவு தண்டங் குறைகின்றதோ அவ்வளவு தண்டம் பொய்பேசுபவனுக்கு அதிகரிக்கின்றது.

எல்லோரும் பொய்யாமையாகிய விளக்கு நின்று பிரகாசிக்கும்படி காக்க முயலுதலுத்தமம். அது அணையாது நின்று பிரகாசிக்குமாயின் சுவர்க்கமடைதலுளதென்பது திண்ணம். அன்றேல் இருள் நிறைந்த நரகத்திற்கே ஆளாகவேண்டும்.

**S. S.**

# மாலினீமாதவம்

அல்லது

# தர்மவிஜயம்.

கல்வியிலும் செல்வத்திலும் சிறப்புற்றோங்கும் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரை நகருக்கு வடமேற்குத் திசையில் சுமார் 50 மைல் தூரத்தில் மணிபுரமென்று சரித்திரங்களில் பேர் பெற்ற ஓர் ஜமீந்தாரியும், அதற்கு முக்கிய ஸ்தலமான மணிபுரமென்ற தலைநகரும் இருக்கின்றன

இம்மணிபுரத்துக்கருகில் ஐவர்மலை யென்ற ஓர் மலைத்தொடரும், அதன் உச்சியில் 'கள்ளன் கோட்டை' யென்ற ஓர் கோட்டையும் தோன்றும்.

இம்மலையினின்றும் "சிற்றாறு" என்ற ஓர் ஜீவநதி பிரவகித்து மணிபுரம் ஜமீன்தாரியை நீர்வளமுள்ளதாகச்செய்துகொண்டு கடைசியாக வைகையாற்றில் சங்கமமாகின்றது.

வஸந்தகால மந்தமாருதமானது இவ்வாற்றின் நீர்த்திவலைகளின் ஸ்பர்சத்தால் குளிர்ச்சிபெற்று, அம்மணிபுரத்தை யடுத்த "வஸந்தவிலாஸ"மென்ற அரண்மனையைச்சார்ந்த உத்யான வனத்தின் தருக்களின் இளந்தளிர்களை மெதுவாயசைத்துக்கொண்டும், பலவகை மலர்களின் நறுமணங்களை வாரிக்கொண்டும் 'ஜில்'லென்று வீசுகின்றது. கதிரவனது வரவைத்தெரிவிப்பவனாய் அழகியசெம்மேனிவாய்ந்த அருணன் பூர்வதிக்கில் உதயமானான். பசுமையான இலைதளிர்களிலும், புற்பூண்டு மலர்களிலும் முத்து வடிவாய்த் தங்கியிருந்த பனித்திவலைகள் சூரியனுடைய இளங்கிரணங்களை பிரதிபிம்பித்து ஸப்தவர்ண ஸ்படிகங்களாகப்பிரகாசித்தன.

அவ்வதிகாலையில், மின்னற்கொடிபோல் துவளும் அழகிய சரீரமும்பொன்நிறம்வாய்ந்த மேனியும், சந்திரபிம்பம்போன்றவதனமும்,

கார் மேகம்போல் கறுத்து மயில் தோகைபோல் அடர்ந்து நீண்டு, குழைந்து மிருது வாய்ந்த கூந்தலும், அடிக்கடி புன்னகை கொள்ளுங்கால் மாதுளை விரைகள்போலழகிய பல்வரிசைகளும் கோவைக்கனிபோல் சிவந்த அதரமும் வாய்ந்த பதினெண் வயதுள்ள ஓர் யௌவன மாது இளந்தென்றலால் படபடவென்று துடிக்கும் மெல்லிய பட்டாடையால் தன் தேக அமைப்பையும் வடிவழகையும் தெரிவிக்கின்றவளாய் அன்னம்போல் அடிபெயர்த்து அடிக்கடி குயில்போல மெதுவாகத் தனக்குள்ளே கானம்செய்துகொண்டு அவ்வுத்தியானவனத்தில் 'கமலா' வென்ற தன் தோழியுடன் பிரவேசமானாள். இவர்கள் அப் பூஞ்சோலை மத்தியிலுள்ள தாமரைத் தடாகத்தருகே ஓர் பன்னீர் மரத்தடியில் போடப்பட்டதும், பனியால் நனைந்து குளிர்ச்சியுற்றதுமான ஓர் பளிங்குக்கல் மேடையிலமர்ந்து, அக்கேணியில், அப்பொழுதுதான் உதயமாகும் சூரிய கரங்களால், காதலன் ஸ்பர்சத்தால் கண்விழிக்கும் காதலிகள் போல தாமரை மலர்கள் விகஸிக்கும் அழகை யானந்தமாய்க் கண்ணுற்றுக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது 'கமலா' என்னும் தோழி மற்றவளை நோக்கி "அடி மாலினி! ஏது இவ்வளவு சீக்கிரம் எழுந்து தனிமையாக இவ்வனம் வந்தாய். உன் முகத்தைப் பார்த்தால் இரா முழுமையும் துயில் கொள்ளாதவள்போலக் காண்கின்றாயே. என்ன விசேஷம்? ஏதாவது மனக்கலக்கம் கொண்டாயோ?" என்று அன்புடன் இனிமையாய் வினவினள்.

மாலினி—"அம்மா! ஒன்றுமில்லை. என்னமனக்கவலையெனக்கு? ஏதோ—" என்று சொல்லிக்கொண்டே முகத்தைத் திடீரென்று திருப்பித் தன் மனவருத்தத்தை யதிக பலவந்தமாயடக்கிக்கொண்டும் அருகிலிருந்த பாரிஜாத மலரைப்பறித்துக் கையிலேந்திக் கண்களில் ஒற்றிக்கொண்டும் மறுபடி தோழியை நோக்கி "கமலா! இம்மலரின் அழகைக் கவனித்தாயா? இது சாதாரணமாய் நமது நாடுகளில் கிடைப்பதரிதாமே!" என்றாள். அதி புத்திசாலியான 'கமலா' இவ்வார்த்தைகளைக் கேட்டதும், ஏதோ நமது தோழிக்கு இவ்விஷயத்தைப்பற்றிச் சம்பாஷிப்பதில் பிரியமில்லை. ஆதலால்,

அதை மறைக்கவெண்ணியே, மலரைப்பற்றி வினவுகிறாள்'' என்று உணர்ந்து "மாலினீ! ஆமாம் இஃது இந்நாட்டிலகப்படக்கூடியதன்று இது ஹிமயமலை வனப்பிரதேசங்களில ஏராளமாய் உற்பத்தியாகின்றதாம். இந்த ஜமீன் திவான் ராஜாராம் அவர்களுக்கு மலர் வகைகளிலதிப்பிரியமிருப்பதால் இதை பெவ்வளவோ பிரயாஸைப் பட்டு மாதிரிக்காக வளர்க்கின்றனராம'' என்றாள்.

மாலினீ:— "கமலா! இவ்வழகிய மலர்கள் நிர்மாநுஷயமான ஹிமயமலை வனங்களில் உற்பத்தியாவதென்றால், அவைகளின் ஜன்மம் என்ன பலனடையும்? அவைகளினருமையை யாரறிவார்'' ?

கமலா:— மாலினீ! நீ சொல்லுவது மெய்யே.

காட்டினில் மலரும் பூக்கள் காதலன் கூடி வாழா
நாட்டினன் மங்கை போல நலமற்று வாடுமன்றே!

என்றுகவிகள்கூறியபடி, தக்கப்ருவத்தில் தன் மனத்துக்கிசைந்த காதலனைக்கூடி வாழாத யுவதிகளின் கதியைப்போல, இம்மலர்களின் ஜன்மமும் பலனற்றதாகவே அமையும்'' என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கவனித்த மாலினி திடுக்கிட்டுத் தன் முன் தானையால் தன் முகத்தை மறைத்துக்கொண்டு தன்னையறியாமல் விம்மி, விம்மியழ ஆரம்பித்தாள்.

கமலாதான் ஏதோ புத்தியீனமாய், மாலினிக்கு வீண்வருத்தமுண்டுபண்ணிவிட்டதாயுணர்ந்து, அன்னவளைத் தன் மார்புமேல் சாய்த்துத் தன் ஆடை நுனியால் அவள் முகத்தைத் துடைத்து "அம்மா! மாலினீ! ஏனடியம்மா திடீரென்று வருத்தப்படுகின்றாயே? உன் சோகத்துக்கு யாது காரணம்? பெண்புத்தியால் நான் ஏதாவது பிதற்றிவிட்டேனோ? என்னை மன்னித்துக்கொள்ளடியம்மா! என் முகத்தைப்பார். என்னுடன் இனிமையாய் ஓர் வார்த்தை பேசேன்'' என்று தீனமாய் இனிய குரலுடன் பிரார்த்தித்தாள்.

தோழி வருந்துவதைக் கவனித்த மாலினி தலை நிமிர்ந்து கமலாவின் முகத்தைஅன்புடன் நோக்கி மந்தஹாஸத்துடன் "கமலா! நான் துயிலில்லை. நேற்றிரவு ஓர் கனவுகண்டேன். அதை நினைத்ததும்

கமலா :—"அிதென்ன கனவு?—என்னிடம்—"

இவர்களிவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில், இளஞ் சூரிய பிம்பப்போன்ற முகவிலாஸமும், பொன்னிறமான மேனியும், அப்பொழுதுதான் பிரவேசிக்கும் யௌவனபருவத்தைக் குறிக்கும் கறுத்து வளர்ந்த இளமீசையும், படர்ந்த மார்பும், உருண்டு திரண்டு முழங்கால்வரை தொங்கும் அழகிய புஜங்களும், வாய்ந்து பாதாதி கேசம் வரை பருவத்துக்கும் காலத்துக்கும் தன் அந்தஸ்துக்கும் தக்கபடியணிந்த உடையும், தலையில்மைஸூர்த்தலைப்பாகைதரித்து, அரையில் உடைவாள் துலங்கச் சுமார் 22-வயதுள்ள யௌவன புருஷனொருவன் கம்பீரமாய் அவ்வுநதிப்புானவனத்தில் பிரவேசித்து நம்முடைய கதா மாதர்களின் முன் நின்றான்.

அன்னவர்கள் சற்று திடுக்கிட்டெழ, கமலா அருகிலிருந்த ஓர் மலர்ச்செடியின் பின் மரியாதையாய் மறைந்தாள். மாலினியோ ஒன்றும் சொல்லத்தோன்றாமல் சற்று பிரமித்து நின்றாள்- மறுபடி வந்தவனை நோக்கி "மாதவ! ஏது விசேஷம்? இவ்வதிகாலையில் இவ்வித ராணுவ உடையுடன் ஏதோ சண்டைசெய்யப் புறப்பட்டவன்போல் விளங்குகின்றாயே!" என்றாள்.

மாதவன் :—" அம்மணி!—"

மாலினி :—" ஆஹா! என்ன மாதவ! என்னை 'அம்மணி'யென்றழைக்கின்றாயே. கண்ணே யென்றும், பெண்ணேயென்றும், மாலினீயென்றும் அன்புடன் இனிமையாயழைப்பாயே? ஏது இவ்வாறு எனக்கு 'அம்மணிப்பட்ட'மளித்தாய்? நான் ஏதாவது உன் மனம் வருந்தும்படி பெண்பேதமையால் செய்துவிட்டேனோ?"

மாதவன் :—மாலினி! அப்படி யொன்றுமில்லை. நான் பால்யமுதல் உன் தகப்பனாருடைய ஸம்ரக்ஷணையிலிருந்து அவருடைய தயவாலிவ்வளவு பதவிக்குக் கொண்டுவரப்பட்டவன். நான் உன்னும் அன்னம் உன் தகப்பனாரைச் சேர்ந்ததே. நீயும் உன் தமயனும் என்னிடம் சகோதரர்போல அன்பு பாராட்டி நேசித்து வந்திருக்கிறீர்கள் ஆயினும், (தொடரும்)

ஆர். எஸ். நாராயணசாமி ஐயர், B. A., B. L.

உ

# * நாட்டுக்கோட்டை நகரத்தார் தர்மமும், கல்வியும்.

கனவான்களே!

தர்மம் செய்யவேண்டியது அவசியந்தான் என்று நம்மவர் (நாட்டுக்கோட்டையார்) முன் பேசுவது கொல்லர் தெருவில் ஊசி விற்பது போலாகும். ஏனெனில் அதுவிஷயத்தில் நம்மவர் நிரம்ப நம்பிக்கையும் கடைப்பிடியுமுள்ளவர்கள். ஆனால், அதைஎப்படிச்செய்யப்படுகிறது, எப்படிச்செய்யவேண்டுமென்பதுதான் நம்மவர்முன் ஒருமுறையல்ல, இருமுறையல்ல, பலமுறையும் பேசக்கூடியதாயிருக்கிறது.

எந்த நிமிஷம் வருவாயதிகமாயிருக்கிறதோ அந்த நிமிஷமே ஏதாவது தர்மம செய்யவேண்டுமென்னும் அருமையான எண்ணமுதிப்பது வணிகமக்களான நம்மவருக்கேயன்றி வேறொருவருக்கும் அமைந்திருக்கவில்லை. மற்ற ஜாதியாருள் இவ்வெண்ணம ஏகதேசமாகத்தானிருக்கிறது. அதிலும் பெரும்பொருள் படைத்தாலன்றி கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது செய்யப்புகுவதில்லை. நம்மவரோ, தங்கள் சுக சௌகரியங்களைக் குறைத்தாவது சிறிது சிறிது தர்மம் செய்யவேண்டுமென்னும் முழு நம்பிக்கையுடையவர்கள். தற்காலத்தில் பெரிய பெரிய ஆலயங்களும, கோபுரங்களும், சத்திரங்களும், சாவடிகளும், மடங்களும், பாடசாலைகளும் சிறப்புற்றிருப்பது நம்மவர்களாலேயேயென்று நாம் சொல்லிக்கொள்ளவேண்டியதில்லை. அது உலகமறிந்தவிஷயம். ஆனால் இப்படி பெரிய பெரிய தர்மங்களை நம்மவர் செய்தாலும பிறர் நம்மைக் குறைகூற இடமில்லாமலிருக்கவில்லையே யென்றுதான் நாம் வருத்தமுற வே

---

* மேலைச்சிவபுரிச சன்மார்க்கசபையின் இரண்டாம்ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்டத்தின் மூன்றாம்நாள் பிற்பகலில் ஸ்ரீலஸ்ரீ விருதை சிவஞான யோகிகளின் அக்கிராசனத்தின்கீழ் மகிபாலன்பட்டி ஸ்ரீமான் M. சின்னையா செட்டியாரவர்கள் மேற்கண்ட விஷயமாகச்செய்த ஓர் முக்கியமான உபந்நியாசத்தின் சுருக்கம்.

ண்டியதாயிருக்கிறது குறைகூறுவதும் நியாயமில்லாமற் கூறினல் நாம் கவனிக்கவேண்டியதில்லை. நியாயமாகவிருக்கும்போது நாம் கவனிக்கவேண்டிய தவசியமாகிறது தற்காலம் நம்மவர் கவனஞ் செலுத்திவருகிற சிவாலயத் திருப்பணி விசேஷபுண்ணியந்தான். ஆனல் அதைத்தவிர வேறு புண்ணிய மொன்றுமில்லையென்று நினைப்பது தவறாகும். திருப்பணி விஷயத்தில் அளவில்லாமற் செலவு செய்வதிலும் பொது ஜனங்களை யாதரித்தற்பொருட்டுச் செய்யப்படுகிற தர்மங்கள் ஈசுவரனுக்கு அதிகப் பிரீதியை யுண்டாக்கும் ஏனெனின் பரமகருணாநிதியாகிய சிவபெருமான் தமது ஏழைமக்கள் நோயுற்றும் கஷ்டப்பட்டும் துக்கப்பட்டும் ஆதரவில்லாமலும் கஞ்சிக்கலைந்தும் வருந்தியும் திரியும்போது அவர்களை யாதரிக்காமல் தமது செல்வமுள்ள மக்கள் தமக்குக் கட்டிவைக்கிற பெரிய ஆலயத்தாலும் செய்துவைக்கிற சுகசௌகரியத்தாலும் திருப்தியடையமாட்டார். அத்தகைய வெண்ணம் சர்வஜீவர்களுக்கும் பிதாவான ஈசனுக்கு ஒருபோது முண்டாகாது. (கரகோஷம்) பிதா மாதாக்கள் தங்கள் சுக சௌகரியங்களைக் குறைத்தாவது மக்களை நன்று யாதரிக்கப் பார்ப்பார்களன்றோ? ஆதலின் கனவான்களே! நமது பிதா மாதாக்களுக்கு நம்மிடத்தே கிருபையுண்டாகவேண்டுமென்றால் நாம் நமது ஏழைச் சகோதரர்களை யாதரித்தலும் பொதுநன்மைக்குற்ற தர்மங்களைச் செய்தலும் அவசியமும் விசேஷ பலன்றரக்கூடிய புண்ணியமுமாகும் இனி; புண்ணியத்தோடு புகழையும் விரும்புவோமானல் அதுவும் ஆலயத்திருப்பணி சம்பந்தமான புகழைப்பார்க்கிலும பொது நன்மையான தர்மங்களைச்செய்வதில் அதிகமான புகழுண்டு இதற்கு உதாரணமாக ஒன்று மட்டும் நாம் கவனிக்கத்தக்கது. நமது ஸ்ரீமான். ஆனரபிள் இராமசாமிசெட்டியாரவர்கள ஸ்ரீ சிதம்பரக்ஷேத்திரத்திலே ஜலவசதிக்காக ஒரு லெட்ச ரூபாய் தர்மம் செய்தார்கள். அந்த தர்மத்தை புகழாத பெரிய மனிதர்களும் பத்திரிகைகளும் நம் நாட்டிலில்லை. கடைசியாக நம்மையாளும் மாட்சிமைதங்கிய கவர்னரவர்களும் சமீபத்தில் சிதம்பரக்ஷேத்திரத்துக்கு விஜயம் செய்திருந்தபோது இதைப் புகழ்ந்துபேசினார்கள், பாருங்கள் இந்த ஒரு லட்ச ரூபா தர்மத்தை எத்தனைப் பெரிய மனிதர்கள் புகழ்ந்திருக்கிறார்கள் இதுபோல

எத்தனை லட்ச ரூபாய்களைச் செலவிட்டுக் கட்டிய சிவாலயங்களைப் பற்றி என்ன பிரஸ்தாபமுண்டாயிற்று. இதனால் ஆலயதர்மம் பிரயோஜனமற்றதென்றும் கூடாதென்றும் நான் சொல்லவரவில்லை. ஆனால் சற்று அளவோடுசெய்து மற்ற தர்மங்களைப்பற்றியும் கவனிக்க வேண்டியதென்பது தான்என்னுடையவிருப்பம். நமது நாட்டுக்கோட்டையார்வசிக்கிற எந்த ஊரிலாவது ஏழைகட்கு தர்மவைத்தியம் செய்யத்தக்க ஒரு வைத்தியசாலை கிடையாது. ஏழைகள் செலவில்லாமற் படிக்கத்தக்க வித்தியாசாலைகள் கிடையா. ஜனங்களுக்கு நல்லொழுக்கம் ஆசாரம் தெய்வபக்திமுதலிய விஷயங்களைப்போதிக்கத்தக்கசபைகளகிடையா. பஞ்சகாலங்களில்ஏழைகளுக்குக்கஞ்சித்தொட்டி வைத்துக் கஞ்சிவார்க்கும் வழக்கம் கிடையாது. ஒரு ஊரிலிருந்து மற்ற ஊருக்குப் போகவரப் பாதை வசதியைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. அதுபெரியகஷ்டம். குன்றக்குடியிலிருந்து இங்குவருவதினும் ஜூதக்குடியிலிருந்து பட்டணம் போவது சுலபம். இன்னும் மெத்தனையோ குறைகளிருக்கின்றன. இவ்விஷயங்களிலெல்லாம் நம்மவர் கவனம் செலுத்துவதில்லை. திருப்பணிசம்பந்தமாக இதுவரை நம்மவர் செலவுசெய்திருக்கிற பெரும்பொருளில் நூற்றில் ஒருபங்கு இப்படி விஷயங்களிற் செய்யப்பட்டிருந்தால் எவ்வளவு நன்மைகளுண்டாகியிருக்குமென்று நீங்களே யோஜித்துப்பாருங்கள்.

இனி நம்மவர் போட்டிருக்கிற சத்திரங்களிலே பிராமணர்கள் மட்டிலும் சாப்பிடலாமென்றிருப்பது சரியல்ல பசிநோய் எல்லாருக்கும் பொதுவானது. பசித்துவந்தவர் யாவராயினும் அன்னமிட வேண்டியதும் வறுமையாளன் எவன் வந்தாலும் ஏதாவது பொருளுதவ வேண்டியதும் அவசியமும் தர்மமுமாகுமேயன்றி இவைகளைப் பெறுவதற்கு ஒருஜாதியார் மட்டும் கடமைப்பட்டவர்களாக மாட்டார்கள். நாம் செய்கிற எந்த தர்மமும் பொது நோக்கத்தோடு செய்வோமாயின் நமக்குப்புண்ணியமும் ஏழைகட்கு ஆதரவும் மற்றவர்கட்கு முயற்சியுமுண்டாகும்.

இனிப் பாடசாலைகளிற் படிக்கிற பிள்ளைகள் பின்னால் பிழைப்புக்கும் வழியின்றித் தவிக்கிறார்கள். அவர்களுக்குப் போதிக்கிற

பாடமும் சொன்னதைச் சொல்வதன்றி பொருள்கண்டு பயன்றருவதில்லை. இதைப்பார்க்கிலும் இப்பாடசாலைகளில் விளக்கமான பாடங்களைக் கற்பித்து நினைப்புக்கு முட்டுப்படாமலும், தெய்வபக்தி ஆசாரம் ஒழுக்கம் விருத்தியடையும்படியும் செய்தால் இப்பாடசாலைத்தருமம் மிகுந்த பயனதரக்கூடும்.

இனி முடிவாக நம்மவர் கல்வியைப்பற்றிச் சிறிது சொல்லிவிட்டு நிறுத்துகிறேன. பிறர் நம்மை மற்ற விஷயங்களி லெல்லாம் கௌரவமாகவே மதித்திருந்தாலும் கல்வி விஷயத்தில மட்டும மிகக்குறைவான எண்ணமுடையவர்களாகவேயிருக்கிறார்கள். உண்மையுமப்படியே. நம்மவர் கல்விகற்பதின் அவசியத்தை முற்றிலும மறந்திருந்தார்களென்றே சொல்லலாம். 10000 ரூபாய் சம்பளம்வாங்குகிற ஒரு ஏஜண்டு கூடியவரையிலாவது, இலக்கணக் குற்றமில்லாமற் கடிதமெழுதக்கூடாதிருந்தால் அது எவ்வளவு விசனகரமான விஷயம். ஆனால் அவ்வளவு சம்பளம் கொடுக்கிற முதலாளியுமப்படியே யென்றால் (கரகோஷம்) நம்முடைய கல்வியைப்பற்றி யென்ன சொல்வது? இப்போது வர வர நம்மவர்க்குச் சிறிது நல்லகாலம் பிறந்திருக்கிறதென்றே சொல்லத்தக்க அறிகுறிகளுண்டாயிருக்கின்றன. சிறிது காலத்துக்குமுன் நம்முள் படித்தவர்களைப் பண்டாரங்களென்று நினைத்தார்கள் (நகைப்பு). இப்போது கற்றவர்களை மதிக்கவும் தாங்களும் கல்வியில் ஆசைகொள்ளவும் ஆரம்பித்திருக்கிறார்கள். செல்வப் பெருக்குள்ளவர்களெல்லாம் கற்க ஆரம்பித்திருக்கிறார்கள். கூடியவரையில் நம்முள் உயர்ந்த கல்விமான்கள் அனேகர் தோன்றக் கூடுமென்று நாமெதிர்பார்க்கலாம்.

நம்மவர் சுயபாஷையை முறையாகக் கற்பதோடு ஆங்கிலபாஷையை யெழுதப்படிக்கக்கூடிய அளவாவது நாம்தெரிந்துகொள்ள வேண்டியது. ஏனெனின் தற்காலத்தில் இராஜாங்க சம்பந்தமான வியவகாரமுழுதும் ஆங்கிலபாஷையில் நடைபெறுகின்றன. நாம் அடிக்கடி அவ்விஷயங்களிற் சம்பந்தப்படவேண்டிய வியாபாரிகளாயிருக்கிறோம். ஒவ்வொருநாளும் நமக்கு ஆங்கிலபாஷை முன்வந்து நிற்கின்றது. அதை நாம் நேரிலறியக்கூடாமல் பிறர் கைபார்த்து நிற்பது நிரம்பக்கஷ்டமும் கௌரவக் குறைவுமன்றோ? இன்னொன்று

ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது நான் Straits Settlements ல் வசிக்கும்போது ஒரு கிளப்பிலிருந்த என் சினேகனான ஒரு ஆங்கிலேயரோடு சில வார்த்தைகள் ஆங்கில பாஷையிற் பேசினேன். உடனே அடுத்திருந்த மற்றொரு ஆங்கிலேயர் Chetties too can Speak English. என்று வெகு ஆச்சரியமாகக் கேட்டார். பாருங்கள் உலகமெல்லாம் இங்கிலீஷ், டவுன்களிலுள்ள வீடு, வாசல், தோட்டம், ரோட்டு, கோடு, கச்சேரி, காப்பிக்கிளப் எல்லாம் இங்கிலீஷ். கடைசியாக சினி மடிக்கிற கடிதாசிகூட இங்கிலீஷ். இப்படி வாய், கை, மேல், காலெல்லாம் இங்கிலீஷாகவிருக்கும் இக்காலத்திலும் நம்மவர் ஒருவர் இவ்வளவு பேசுவது வெகு ஆச்சரியமாம்! இதனால் நம்மவரை யெந்தமட்டில் மதித்திருக்கிறார்களென்பது நன்றாய் வெளியாகவில்லையா? கனவான்களே! இதுவிஷயத்தை இன்னும் நீட்டிப்பேசுவதற்கு அவமானமாகவிருக்கிறது.

நமக்கு இப்போது முதலில் வேண்டியது கல்விதான். அக்கல்வியும் சுயபாஷையோடு ஆங்கிலமும் கற்கவேண்டியது அவசியமாகிறது. அதனாலேயே நமக்கு வேண்டிய முக்கிய திருத்தப்பாடுகளெல்லாம் தானே வந்துவிடக்கூடும். ஆதலின் நம்மவர் வசிக்கிற ஊர்கள் தோறும் வித்தியாசாலைகளும் தேவகோட்டை, காரைக்குடி, கானாடுகாத்தான் முதலிய பெரிய ஊர்களில் வித்தியாசாலைகளோடு இங்கிலீஷைக் கற்கத்தக்க High School களும் ஆசார ஒழுக்கங்களை கற்பிக்கத்தக்க சபைகளுமேற்படவேண்டும். நம்மவர் தர்மஞ் செய்யப்புகும்போது அது பொது ஜனங்களுக்குபயோகமானதாவென்று முதலில் யோஜித்துச் செய்யவேண்டும். ஒரு நாளைக்கு ஒருமணிநேரமாவது பொதுவிஷயங்களைப்பற்றிச்சிந்திக்கவேண்டும். சமாசாரப் பத்திரிகைகளை ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டும். தேச சரித்திரங்களை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். எல்லாரோடும் சௌஜன்னியமாகப் பேசிப் பழகவேண்டும். இவைகளெல்லாம் மனிதவாழ்வுக்கு மிக அவசியமான விஷயங்களாகும். உலகத்திலே எவன் தன்னைப்போல பிற ஜீவர்களையும் நினைத்து பிற ஜீவர்களுக்கு இதம்புரிவதே தனது கடமையெனக்கொண்டு பிறர்வருத்த மனம்பொறுத பெருமையாளனோ அவனே மனிததெய்வமென

ப்படுவன். அவனே மோக்ஷத்துக்கருகன். அவ்விஷயங்கட்குள்ளேயே சரியை, கிரியை, யோகம், ஞானம் எல்லாமடங்கியுள்ளன. அவனே நமதீசனுக்கு முதற்புதல்வனாகிறான். இதை நம்மவர் ஒவ்வொருவர் மனதிலும் நிலைக்கச்செய்யவேண்டுமென்று திருவருளைப் பிரார்த்தித்து என்னுடைய உபந்நியாசத்தை இம்மட்டோடு முடித்துக்கொள்கிறேன்.

(நாட்டுக்கோட்டையாருள் பல பிரபுக்களும் கனவான்களுமாக சுமார் 2500 ஜனங்கள் கூடியிருந்த இந்தப் பெரிய கூட்டத்தில் ஸ்ரீமாந் சிந்நயச் செட்டியாரவர்கள் இங்ஙனம் பேசி முடித்தவுடன் மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் எழுந்து செட்டியாரவர்களின் சொல்வன்மையையும், மனக்கிளர்ச்சியையும், ஆராய்சசித் திறத்தையும்பற்றி எடுத்துக்கூறியதுடன், "இராமன்பின்பு பிறந்தானு முளனெனப் பிரியாதான்" என்று இளையபெருமானைப்பற்றிப் பரதன் கூறியதுபோல இச்சபையின் தோற்றத்திற்குக் காரணபுருஷராகிய வித்துவான் ஸ்ரீ. மு. கதிரேசச் செட்டியாரவர்களின் கல்வியாற்றலுக்கு ஏற்றதுணைவர் இச்சிந்நயச்செட்டியாரவர்களே யென்பது இப்போது விளக்கமாயிற்றென்று மிகவும் பாராட்டிப் பேசினார்கள் முடிவில் சபாநாயகரவர்களும் நன்கு எடுத்துக் கூறினார்கள்.)

இங்ஙனம்,
த. நாராயணசாஸ்திரிகள்,
சம்ஸ்கிருதபண்டிதர் மகிபாலன்பட்டி.

# மேலைச்சிவப்பட்டிச் சன்மார்க்கசபை.

---

## இரண்டாம் ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்டமும், நூதன சபா கிருகப்பிரவேசமும்.

23—4—11ல் மாலை 7-மணிக்கு அக்கிராசனம்வகிக்க அவண் விஜயஞ்செய்த ஸ்ரீலஸ்ரீ. சுவாமி விருதை சிவஞானயோகிகளை மேளவாத்திய நிவர்த்தியாதிகளுடன் சபையார்வந்து எதிர்கொண்டு அழைத்துச சென்றார்கள். வந்திருந்த வித்துவான்கட்கும் பிறர்க்கும் உறையுளும் உணடியும் முதலிய வசதிகளெல்லாம் தக்கவாறு அமைக்கப்பெற்றிருந்தன. பதினயிரரூபா செலவிட்டுக் கட்டிமுடித்த நூதன சபையின் அமைப்பையும் அழகையுங்கண்டு யாவரும் மகிழ்ந்தனர். 24ஆ சோமவாரம் காலை 9.மணிக்குமேல் ஸ்ரீ கணேசமூர்த்தி திருவுருவப்படததை அவ்வூர் விக்நேசுவரர் ஆலயத்தில்வைத்து ஆராதனைசெய்வித்து மேளவாத்தியங்களுடன் நகரத்தார்களாகிய சிவநேயமிக்க வணிகமணிகளும் பிறரும் சூழ பூரண கும்பங்களுடன் எழுந்தருளச்செய்து நூதன சபையில்வந்து விநாயகமூர்த்தி படததை எழுந்தருளப்பண்ணி கிருகப்பிரவேசமும் ஸ்ரீ வாகீசப்பெருமான் குருபூஜையும மகேசுவரபூஜையும் பிராமணபோஜனமும் நகரத்தார் பெருவிருந்தும் வெகு சிறப்பாக நடைபெற்றபின் மாலை 3-மணிக்குச சபை கூடியது.

அக்கிராசனாதிபதியவர்கள் ஆசனத்தமர்ந்தபின் தமிழ் வேதபாராயணம் செய்யப்பெற்றது. மகிபாலன்பட்டி இருமொழிப்புலவரும், இச்சபையின் உண்மையான காரியநிர்வாகருமாகிய ஸ்ரீ மு. கதிரேசசெட்டியார் அவர்கள் அக்கிராசனாதிபதியவர்களின் மும்மொழித்திறமை, பிரசங்க வன்மை, யோக ஞானப்பேறு முதலிய உயர்வுகளை விரித்துக கூறியதோர் வநதனோபசார பத்திரத்தைப் படித்தார்கள். சபையின் காரியதரிசியும் வித்துவானுமாகிய குமரப்பசெட்டியாரவர்கள் இச்சபையின் இரணடாம் ஆண்டு நிகழ்ச்சியான பல நல்விஷயங்களையும் வருங்கால நன்மைகளையும் விளக்குவதான அறிக்கைப்பத்திரம் படித்தார்கள். அதில் "இவ்வாண்டில் அங்கத்தினராகச் சேர்ந்தவர் அறுபத்துமூவராவர்" என்று காணப்பட்டது. 63 பேர்கள அங்கத்தினரானமையைக் குறிப்பிட்ட சொற்றொடராயினும், "அறுபத்துமூவராவர்" என்று நாயன்மார்களின் தொகைக்குறிப்பை யுணர்த்துவதான் நன்னிமித்தமொழியாதலைப்பற்றிச் சபையார்கரகோஷஞ்செய்து மகிழ்ந்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் சபையின் ஆக்கத்திற்குவேண்டிய பல விஷயங்களைப் பேசி ஒருவாழ்த்துசெய்யுளும் கூறினார்கள்.

இச்சபையில் சுமார் 600 ஜனங்கள் இருத்தற்கே இடங்கிடைக்கும் வந்திருந்த ஜனங்களோ 2000-த்துக்கு மேலுண்டு. ஆகவே இடமின்மையால் ஜனங்கள் வெளியிலே கூட்டங் கூட்டமாய் நின்று வருந்துவதைப்பார்த்து மாலை 5-மணிக்கு சபையின் முன்புறம் வெளியிடத்தில் அமைக்கப்பட்ட பந்தலின்கீழ்ச் சபைகூடியது. எல்லாஜனங்களும் முகமலர்ந்து வீற்றிருந்தனர். நம் தமிழ்நாட்டில் பெருஞ் செல்வவான்களும், பெரிய பெரிய மாளிகைகளைக்கட்டிப் பட்டுமெத்தையின்மேல் வில்வெட்டுதிண்டில் சாய்ந்து இரட்டைவிசிறிவீச இனிது வீற்றிருப்பவர்களுமாகிய நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளில் பிரபல கனவான்களான பல்லோர் பகலெல்லாம் சுடுவெயிலடித்த வெளியிடத்தில் பெருமகிழ்ச்சியுடன் பிரசங்கிகளைநோக்கிய ஆவல்முகத்துடன் வீற்றிருந்தனர். இவ்வகுப்பாரின் பெண்பாலார் நூற்றுக்கணக்காக வந்து நிற்பாராயினர். இவற்றுக்கெல்லாம் காரணம் சைவசமயத்திலும் தமிழிலும் இவர்கட்குள்ள அபிமானமே யென்பது யாவரு மறிந்ததே. சாலியமங்கலம் வித்துவானும் சிவநேயச் செல்வருமாகிய ஸ்ரீ மு. சாம்பசிவநாயனாரவர்கள் "ஸ்ரீ வாகீசப்பிரபாவம்" என்ற விஷயத்தையும், மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் "இல்லறவொழுக்கம்" என்றவிஷயத்தையும், எழுதி வாசித்தார்கள். மதுரை ஸ்ரீமத். கல்யாணசுந்தர பட்டரவர்கள் "சிவபரத்துவம்" என்பதைப்பற்றிப் பற்பல கிரந்தசுலோகங்களை இன்னிசையுடன் கூறிப் பொருள்விரித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் அவ்வவ் விஷயங்களைப்பற்றி ஏற்குமாறு எடுத்துக் கூறினார்கள். இம்மட்டில் முதல்நாள் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நிறைவேறியது.

25உ காலை 9-மணிக்கு மறுபடியும் சபை கூடியது. முதல்நாளைப்பார்க்கினும் ஜனக்கூட்டம் அதிகமே. "பதியிலக்கணம்" என்னும் விஷயத்தை மதுரை ஸ்ரீமத் பரமேசுவர பட்டரவர்களும், "ஆலயதத்துவார்த்தம்" என்னும் விஷயத்தை ஸ்ரீ. நா. பொ. முத்தையபிள்ளையவர்களும் முறையே உபந்யசித்தார்கள். சபாநாயகசுவாமிகள் அவற்றினை விளக்கிச் சில கூறி முடிக்க 12-மணியாயிற்று. அதன்மேல் யாவரும் உண்டியுட்கொண்டதும் மாலை3 -மணிக்கு மறுபடியும் சபை கூடியது.

யாழ்ப்பாணம் வித்துவானும் ஞானசித்தித் பத்திராதிபரும் ஆகிய ஸ்ரீமத் சி. தாமோதரம் பிள்ளையவர்கள் "சிவவழிபாடு", என்னும் விஷயத்தை திருக்கன்றாப்பூர்ச் சரித்திரத்துடன் உபந்யசித்தார்கள். பின்பு மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத். மு. கதிரேசச் செட்டியாரவர்கள் "நாட்டுக்கோட்டைநகரத்து வணிகமக்களின் சீர்திருத்தம்" என்ற தலைப்பெயரிட்டு எழுதிய பெரிய இனிய வியாசம் வாசிக்கப்பெற்றது. இதாகவ கூடிய ஒவ்

வொரு விஷயங்களும் தம்மவர்கள்பொருட்டுக் கூறியதாக இருந்தாலும் அத்திருத்தங்களை எல்லாரும உட்கொண்டு புகழத்தக்கவாறு நன்மையாகக் காணப்பட்டன். பின்னர் கானாடுகாத்தான் ஆனரபிள் ஸ்ரீமத், சா. ராம. மு. இராமசாமிச் செட்டியாரவர்கள் எழுந்து தமமவர்பொருட்டு மு. கதிரேசச் செட்டியாரவர்கள் கூறிய திருத்தங்களை ஆமோதித்துப் பேசியது டன் தாம் உபந்யசிக்கவேண்டிய "கல்வி" என்ற விஷயத்தைப்பற்றிப் பெரும்பாலும் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் கூறியிருப்பதால் தாம் ஏதாவது வேறொருவிஷயத்தை எடுத்துப் பேசலாமா எனக் குறிப்பித்தனர், சபையார்கள் "ஆசிரியர் திருவள்ளுவர்மதம்" என்பதைப்பற்றிப் பேசுமாறு வேண்ட அவ்வண்ணமே கனம் செட்டியாரவர்கள் திருவள்ளுவர் சைவசமயத்தினரே என்பதற்குத்தக்க பிரமாணங்களைக் காட்டியும், ஏகமதத்தினர் அருகர், சமணர், வைணவர் முதலிய பல மதத்தினர்களும திருவள்ளுவரை தமதத்தம் மதத்தினரென்பது பொருந்தாமையை நிரூபித்தும் இனிமையாகப் பிரசங்கித்தார்கள். இவ்விஷயத்தையே இராமநாதபுரம் சேதுசமஸ்தான.வித்துவான் ஸ்ரீ. மு. ராகவையங்காரவர்களும், சோழவந்தான் வித்துவான் மகா-௱-௱ ஸ்ரீ அரசஞ்சண்முகனாரவர்களும் ஆமோதித்துப் பேசினார்கள். மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் எழுந்து ஸ்ரீமாந் இராமசாமிச்செட்டியாரவர்கள் பிரசங்கத்தை வியந்து அடியில் வரும் இரண்டு செய்யுட்களைக் கூறி அவற்றின் பொருளை விரித்துக் கூறினார்கள்.

அதிகமுறும் புண்ணியமுற் றவர்விருப்ப மிம்மையிலே யருள்வான் கங்கை
நதியணியும் பரனதனாற் சன்மார்க்க சபையகதது நலமோர் கொண்ட
மதிவிருப்புவ கதிரேசக் கவிஞனுரைத் தவுமிவன் வழங்கல் போலும்
துதிபெருகல் விராமசுவா மிக்கனவான் பிரசங்கஞ் சொரிந்த மாணபே.

ஏகமதத் தினரருகர் மான்மதத்தர் முதலானோ ரெம்மோ ரென்னும்
ஆசில்திரு வள்ளுவனா ரேகமதத் தினரல்லர் அருக ரல்வர்
பேசுமான் மதத்தரல்லர் சைவரென்ல் சீர்மிகுத்துப் பெறும்பதத்தாற்
காசினியிற் கலைமானைக் கின்னராம சாமிசொற்லித் கண்டா மன்னோ.

இவ் விருகவிகளிலுமுள்ள சிலேடைப் பொருள்களைக் கேட்டு அவைக்களத்தமர்ந்தாரனைவரும மிகவும் சந்தோஷமடைந்து பன்முறை கரகோஷஞ்செய்து வியந்தார்கள். பின்னர் செங்கொற்குடி வித்துவான் ஸ்ரீமத் வீரக்கவியவர்கள் "பாசலக்கணம்" என்பதைப்பற்றிப் பிரசங்கித்தார்கள். சபாநாயகரவர்கள் எல்லா உபந்நியாசங்களையும் எடுத்துக்கூறி முடித்தார்கள்.

26௳ காலை 9-மணிக்குச் சபைகூடியது. வண்ணார்பேட்டைவித்துவான் ஸ்ரீ. சுந்தரமூர்த்தி பௌராணிகரவர்கள் "சைவசித்தாந்தம்" என்ப

இன்னவளம் பதியதனிற் புடையுடுத்த சோலையெலா மெழிலாலோங்கிப்
பொன்னகரந் தனையளவி வளர்வனால் வானவர்பாற் பொருக்கென்றெவ்வி
மன்னுகலை வல்லோர்சேர் சன்மார்க்க சபைக்கின்னே வருதிரென்றெ றன்
றனவுணா யழைப்பதற்குச் சார்வனபோன் றெவ்விடத்து மமையுமாதோ. (௨)

திருமகளுங் கலைமகளு மொருமையுடன் மருவிவளர் சிவமாரூரிற்
றருமநெறி யொருவாத பழனியப்ப வேணிருவுஞ் சன்மார்க்கப்பேர்த்
திருமருவுஞ் சபைக்கேவா வாராதார் புலவரெலாந் திரண்டு நின்றே
பொருவரிய பிரசங்கத் தேன்பொழிந்தே யானந்தம் புகட்டினரே. (௩)

வாழி வாழிசன் மார்க்க சபைமிக
வாழி வாழிமே லைச்சிவ மாநகர்
வாழி வாழியிம் மாநிலம் யாவையும்
வாழி வாழி யறமபல மன்னியே. (௪)

பின்னும் சிலர் வாழ்த்துக்கவி கூறினார்கள். கணேச செந்தமிழ்க் கலாசாலை மாணாக்கர்களில் இளம்பருவத்தின ரிருவர் சபைவாழ்த்தாக இனிய செந்தமிழ்ச் சொற்றொடர்களால் அழகாகச் சில வாக்கியங்களைக் கூறினார்கள். வித்துவான்களுக்கெல்லாம் பூவாரம் புனைந்தவுடன் நிரந்தர அக்கிராசனாதிபதியவர்களாகிய வ. பழ. சா. பழனியப்ப செட்டியாரவர்கள் எழுந்து அக்கிராசனம்வகித்த சுவாமிகட்கும் பிரசங்கிகளான புலவர்கட்கும் சபையோரான கனவான்கட்கும் வந்தனங் கூறத்தொடங்கி இச்சபை தன் இளம்பருவத்தே இவ்வளவு பெருஞ் சிறப்பை யடைதற்குக் காரணம அரும்பெருங் குணஞ்செயல்களைத்து நிரம்பிய வடமொழி தென்மொழி வல்லுநரான ஸ்ரீமாந் கதிரேசச் செட்டியாரவர்களது நன்முயற்சியே யென்று கூறி முடித்தார்கள். இவர்கள் பேச்சின் இனிமையும் பொருளமைதியும் சபையைப் பரவசப்படுத்தின. அவர்கள் மனத்துள் நிரம்பியிருந்த அன்புவெள்ளம் பொங்கி வழிந்தாற்போலவே ஒவ்வொரு சொற்களும் பெருமகிழ்ச்சியை விளைத்தன. எல்லாரும் எழுந்து வாத்தியகோஷத்துடன் அக்கிராசனாதிபதியவர்களை அவர்கட்கு அமைத்திருந்த ஆசிரமத்தில் கொண்டுபோய்விட்டு விடைபெற்று மீண்டனர். இங்ஙனமாக இக் கொண்டாட்டமானது எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இனிது நிறைவேறியது.

பத்திராதிபர்.

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குருமஹாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகசுவாமிகள் கொடை மாட்சிக்கவிகள்.

இவை

சேது சம்ஸ்தான வித்துவான்

ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் பாடியன.

—— (o):——

வறியா ரொருவரு மில்லாத வானில் வழங்குமென்றீங்
கறியார் புனைந்துரைக் குந்தரு வைந்துக்கு மையனின்போற்
செறியா ரளியும் வரிசை யறியுந் திறனுமுண்டோ
சிறியா ரலார்பர வம்பல வாணநற் றேசிகனே. (௧)

விடமென்று கண்டார் வெருவுங் குணம்பெற்று மெய்வளைந்து
நடமொன்று கோடி தலைக்கொண் டுருகாச் சயிலமதை
யிடமொன்று தூய குணநிதி யாரிற் இணையென்பலோ
திடமொன்ற கோமுத்தி யம்பல வாணநற் றேசிகனே. (௨)

அலைவளைக் கும்புவி தாவகி யறிவி னமர்ந்தவராத
தலைவளைக் கும்பெரு மாமதி குற்றந் தணந்தவரவில்
கலைவளைத் தென்று மிளிர்ந்து வளர்வது கண்டுவந்தேன்
மலைவளைக் குந்திற லம்பல வாணன் மனத்தகத்தே. (௩)

முந்தானை மேற்பொன் வடமொழி வாணர் முந்துகொளத்
தந்தானைத் தாராசிருபனென் றுயர்த்த தமிழ்புரக்க
வந்தானைக் கோமுத்தி யம்பல வாணனை வான்புயற்குப்
பிந்தானை யாகவொன்றைத் தாராவென் றுலும் பெருமையதே. , (௪)

---

## சமாசாரக்கொத்து.

ஐரோப்பாவில் புஷ்பங்கள்.—ஐரோப்பா கண்டத்தில் 4,300 வகைப் புஷ்பங்கள் பயிராகின்றன. இவைகளைப் பரிசோதித்துப் பார்த்த ஜர்மன் தேசத்துத் தாவர சாஸ்திரி ஒருவர் சுகந்தமுள்ள புஷ்பங்கள் 420 வகைதா னிருக்கின்றன வென்றும், 4,300 வகையில் பாதிக்கு மேற்பட்ட புஷ்பங்கள் துர்க்கந்தமுடையனவா யிருக்கின்றன வென்றும் பல, புஷ்பங்கள் வாசனை யில்லாம லிருக்கின்றன வென்றும் கண்டுபிடித்திருக்கிறார். மேலும் வெண்

மை நிறங்களுடையன சுகந்தமலர்களா யிருக்கின்றன வென்றும் வாசனையு முடையன வாசனை குறைந்தனவென்றும் அவர் சொல்கிறார்.

100 வயதுக்கு மேற்பட்ட இரு யூதர்கள் இறந்துபோனார்கள்:— ஒருவருக்கு 13 வயதும் மற்றொருவருக்கு 120 வயதும் முடிகிறதாம். முந்தியவர் ருஷியாவின்மீது படையெடுத்துவந்த பிரான்சுதேசத்திய கெபோலியனை அக்காலத்தில் பார்த்தாராம். பிந்தியவருக்குப் பேரன் பேத்திகளெல்லாம் சேர்ந்து, 45 பேர்களிருக்கிறார்களாம். இவர்கள் ருஷியாவில் சமீபகாலத்தில் இறந்துபோனார்களென்று யூதப் பத்திரிகையொன்று பிரசுரித்திருக்கிறது.

லிண்டன் மரம்:—ஜர்மனிதேசத்தில் தோனஸ் மலைச்சாரலிலுள்ள ரெம்ஹார்ன் (Remhorn) என்னும் ஊரிலுள்ள ஒரு லிண்டன் மரம் 1200 வருஷத்திற்கு முந்தியதாம். கோடைகாலத்தில் மரம் தழைத்து 200 பேர்கள் தங்கும்படியான நிழலைத் தருவதோடு அந்தமரத்தின் பொந்தில் 12 பேர் சாதாரணமாக விருக்கலாம். அந்தமரத்தின் அடிச் சுற்றளவு 39 அடி.

பறக்கும் தவளைகளும் அணில்களும்:—ஜாவாத்தீவில் பறக்கும் தவளைகளிருக்கின்றன. அவைகளின் மேல்புறம் பச்சை நிறமுள்ளதாயும், வயிறு வெண்மையாயும், கால்களுக் கிடையிலுள்ள பறப்பதற்கேற்ற மெல்லியதோல்கள் மஞ்சள்நிறமாயு மிருக்கின்றன. இதேமாதிரியாகப் பறக்கும் அணில்களும் இருக்கின்றனவாம்.

பெட்டைக் கோழியின் விலை:—பிலதல்பியாவில் பறவைச்சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு சாதிக் கருப்பெட்டைக்கோழி இரண்டு 400 பவுனுக்கு விற்கப்பட்டதாம். அதன் முட்டை யொன்று 5பவுனுக்கு விற்கப்பட்டதாம் இது பணப்பெருக்கைக் காட்டுகின்றது.

புராதனமான புளியமரம்:—திருநெல்வேலிஜில்லா, திருச்செந்தூர் தாலூகா, ஆழ்வார்திருநகரில் ஒருபழையபுளியமரமிருக்கின்றதாம். இது ஆதிசேஷ அவதாரமாகவுள்ளதென்றும், திரேதாயுகத்தில் இலட்சுமணரே மரஸ்வரூபமாயினரென்றும் பலவாறு அபிப்பிராயப்படுகின்றார்கள். இம்மரம் பூர்ப்பதும் காய்ப்பதுமன்றிப் பழமாவதில்லை. மரத்தில்நெருப்புப் படுமாயின் உடனே மனிதரது தேகத்தில்வரும் கொப்புளம்போலக் கொப்புளித்துவிடும். இம்மரத்தின் அதிசயச்செயல்கள் இன்னும் பலவுள. இவைகள் தற்காலத்தில் விசேடமான சம்பவங்களே!

பத்திராதிபர்.